1978 செப்டம்பர் 11[

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இவ்வாறு பயிற்சி பெற்று வந்த பிறகு, அவர்களுடைய பயிற்சியினுடைய பலன்களைப் பள்ளிக்கூடங்களில் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதில்லை என்ற குறைபாடு இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் காணப்படுகிறது. மக்களுடைய வரிப்பணத்திலிருந்து பயிற்சிக்காக பல ஆயிரக்கணக்கான ரூபாயை ஒதுக்கிச் செலவழித்த பிறகு, அப்படிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுடைய பணியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பயிற்சியினுடைய பயனைப் பெற அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ் : பயிற்சி பெறுகின்ற பள்ளிகளில் அவர்களுக்கு என்று நல்ல சுகாதார வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று இத்தகைய பயிற்சியை நடத்தினார்கள். பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத்துறையில் சேனிட்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு பயிற்சிபெறும்போது, நாள் ஒன்றுக்கு 12 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது. இந்தத் தொகையானது சிட்டியைப் பொறுத்தவரை, சிட்டி அலவன்சைவிட 1 1/2மடங்கு. ஆனால் பி. டி. ஆசிரியர்கள் சென்னையிலே பயிற்சி பெறும் நாள் ஒன்றுக்கு 5 ரூபாய்தான் வழங்கியிருக்கிறார்கள். இரண்டு பிரிவுக்கும் மாறுபாடு இருக்கிறது. சானிட்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு நாள் ஒன்றுக்கு 12 ரூபாயும் பி. டி. ஆசிரியர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள். பி. டி. ஆசிரியர்களுக்கு 5 ரூபாய் என்று இருப்பதை இனியாவது மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Janaki Anni High School, Alathambadi.

* 65. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether, as per G.O. Ms. No. 562, Education, dated 25th March 1976, Janaki Anni High School, Alathambadi, Thanjavur district, was taken over by the Government from the Academic Year 1976-77; and

(*b*) if so, whether all the privileges enjoyed by teachers in Government Schools, such as Selection Grade, Increments, Festival Advance, Leave Benefits, etc., have been extended to the teachers in the said school?

[1978 செப்டம்பர் 11

ஜானகி அண்ணி உயர்நிலைப் பள்ளி, ஆலதம்பாடி

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஆலதம்பாடி, ஜானகி அண்ணி உயர்நிலைப்பள்ளி, கல்வித் துறையின் 25-3-1976-ஆம் நாளிட்ட 562-ஆம் எண் அரசு ஆணையின்படி 1976-77-ஆம் கல்வியாண்டி லிருந்து அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டதா?

(இ) ஆம் எனில், அரசுப் பள்ளிகளின் ஆசிரியர்கள் அனுப வித்துவரும் சிறப்புரிமைகளான தேர்வுநிலை, ஊதிய உயர்வுகள், பண்டிகை முன்பணம், விடுப்பு ஆதாயங்கள் முதலியவை மேற் சொன்ன பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப் பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம், அரசாணை நிலை எண் 562, கல்வித்துறை: நாள் 25-3-76ன்படி ஜானகி அண்ணி உயர்நிலைப்பள்ளி, ஆலதம்பாடி, தஞ்சாவூர் மாவட்டம், அரசினல் கல்வி ஆண்டு 1976-77ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(இ) மேற்கூறிய உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களின் சார்பாக சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்தி அவர்களை நிரந்த ரமாக அரசுப் பணியில் ஏற்றுக்கொள்ளும் அரசாணை வெளியிடப் பட்ட பின்னரே அவர்களுக்கு தெரிவுநிலை, ஊதிய உயர்வு, பண்டிகை முன்பணம், ஊதியத்தோடு கூடிய விடுப்பு ஆகிய வசதிகள் வழங்கப்படும். இருப்பினும் இவர்களுக்கு உதவி பெறும் பள்ளியில் இறுதியாக அளிக்கப்பட்ட ஊதியம் வழங்கப் பட்டு வருகிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: இந்த ஜானகி அண்ணி உயர் நிலைப் பள்ளியை அரசினர் மேற்கொண்டிருக்கிற காரணத்தால், அரசு ஆசிரியர்களுக்கு உள்ளது போல் பணி வரன்முறைப்படுத்தல், தேர்வுநிலை வழங்கல் போன்ற சலுகைகளை வழங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்தும்போது, இவற்றையெல்லாம் கொண்டு வரலாம்.

திரு. க. மீனுட்சிசுந்தரம்: தனியார் பள்ளியை அரசு ஏற்பது என்று முடிவெடுத்த பிறகு, அதன் அடிப்படையில் அரசு ஆணை பிறப்பித்து, அதன்படி ஏற்கப்பட்டும் விட்டது. அப்படி முடிவெடுக்கும்போது அவர்களுக்கும் அரசுப் பள்ளிக் கூடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குரிய சலுகைகளைப்போல அளிக்கும் வகையில் இதுவரை செய்யாமறபோனலும்கூட, இனி மேலாவது அளிப்பதற்கு ஆணையிடப்படுமா?

1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளிகள் அல்லது தனியார் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளை அரசு எடுத்துக்கொண்டால் அந்த ஆசிரியர்கள் கடைசியாக என்ன சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார்களோ அதுதான் வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னால் வழங்கப்படக்கூடிய சலுகைகளை அதாவது பணி வரன்முறைப்படுத்தப்படுதல் போன்ற சலுகைகளை வழங்க ஒரு சரியான உத்தரவை வழங்கி நியாயம் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்ற பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக இந்தச் சலுகைகளை அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவது இல்லை என்பதுதான் இங்கே கேள்வி. அது இதுவரை இருந்து வந்த நிலைமையை எடுத்துக் காட்டுகிறது. அத்தகைய தாமதங்களைத் தவிர்க்க அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

[பிற்பகல் 4-50]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இவ்வாறு தனியார் பள்ளிகளை அரசு மேற்கொள்ளும்போது, அங்குள்ள ஆசிரியர்கள் அந்தப் பள்ளிகளில் பணியாற்றிய காலத்தை, சீனியாரிட்டிக்கு கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று சொல்லப்படுவது உண்மையா ? இது உண்மையானால், அந்தப் பணிக் காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ள அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; அரசுப் பணியில் அத்தகைய ஆசிரியர்களை ஏற்றுக் கொள்ளுகிறபோதே, அந்த விதிகளுக்கு ஏற்பதான் பணியில் அமர்த்திக் கொள்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

M.Ed. Training for School Teachers.

* 66. *Q.*—Thiru V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the year from which the scheme of sending school teachers for M.Ed. Training at Government expenditure has been started;

(*b*) the annual expenditure incurred thereon by the Government; and

(*c*) the period for which teachers trained under this scheme, are working in the Training Centres?